


கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம், மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ. 1 கோடியே 38 இலட்சத்து 8 ஆயிரத்திற்கான கடன் உதவிகளை மாவட்ட ஆட்சியர் அலுவலக லூர்ப்பிரெயிலி கூட்டரங்கில் இன்று (25.10.2016) வழங்கினார். மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் திருமதி. டி. கெட்சி லீமா அமலினி உடனுள்ளார்.

செ.வெ.எண்: 759/2016 நாள்: 25.10.2016

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம், மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ. 1 கோடியே 38 இலட்சத்து 8 ஆயிரத்திற்கான கடன் உதவிகளை இன்று (25.10.2016) வழங்கினார்.**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் மாவட்ட திட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலக லூயிபிரெயிலி கூட்டரங்கில் இன்று (25.10.2016) நடைபெற்றது.

கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மூலம் ஊரக ஏழை மக்களுக்கான வலுவான உயிரோட்டத்துடன் கூடிய மக்கள் அமைப்புகளை உருவாக்கி, நிதி சார்ந்த மற்றும் நிதி சாராத பல்வேறு சேவைகளையும் முறையாக பெற வழிவகை செய்து, வாழ்வாதாரத்தை உயர்த்தி குடும்ப வருமானத்தைப் பெருக்குவதே இவ்வியக்கத்தின் நோக்கமாகும் என தெரிவித்தார்.

பின்னர் குமரன்குடி ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கு பெருங்கடன் தொகையாக ரூ. 44 இலட்சமும், மகளிர் சுயஉதவிக் குழுக்களை சார்ந்த 8 சுயஉதவிக் குழுக்களுக்கு நேரடி வங்கி கடனாக ரூ. 91 இலட்சமும், 4 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு ஆதார நிதி ரூ. 45 ஆயிரமும் மற்றும் 17 மாற்றுத்திறனாளிகள் மற்றும் நலிவுற்றோருக்கு தனிநபர் கடனாக ரூ. 2.63 இலட்சமும் என மொத்தம் ரூ. 1 கோடியே 38 இலட்சத்து 8 ஆயிரத்திற்கான கடன் உதவித்தொகைகளை இன்று வழங்கினார்.

நிகழ்ச்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி. டி.கெட்ஸி லீமா அமலினி, மகளிர் திட்ட உதவி திட்ட அலுவலர்கள் திரு. எம். ஆறுமுகம், திரு. அந்தோணி சிலுவை, திருமதி. எம். கலைச்செல்வி, திரு. எம்.கே. பிச்சையப்பா, வட்டா வளர்ச்சி அலுவலர்கள் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.